00039

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவிய மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக்கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் -- மட்டம் IV
இறுதிப்பரீட்சை - **2017/2018**
வர்த்தகச் சட்டம் - **LWU4324 / LLU6716**
காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

---

திகதி : 01.03.2020 நேரம்: பி.ப 1.30 – பி.ப 4.30

---

**தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**
**மொத்த வினாக்களின் எண்ணிக்கை : 08**
**ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**

1. (அ) IIம் இல 1896 ஆம் ஆண்டின் பொருட்கள் விற்பனைகள் சட்டத்தின் கீழ் "பொருட்கள் விற்பனைக்கான ஒப்பந்தம் ஒன்றுக்கும் விற்பனைக்கான உடன்படிக்கை" ஒன்றுக்கும் இடையிலான வேறுபாடு என்ன? இயைபான சட்ட ஏற்பாடுகள் மற்றும் உதாரணங்களுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

**(06 புள்ளிகள் )**

(ஆ) "சட்டத்தில் (ஐக்கிய இராச்சிய பொருட்கள் விற்பனை சட்டம்) ஸ்தாபிக்கப்பட்டுள்ள அடிப்படை விதிகளின் ஒன்றிணைந்த விளைவானது தரத்தில் குறைபாடுடைய பொருட்களின் ஆபத்தை அல்லது அத்தகைய நோக்கப்பாடு பொருத்தமற்றது என்பதை நிறுவுவதற்கு எதிராக கொள்வனவாளர்களுக்கு கனிசமானளவு பாதுகாப்பை வழங்குதல் ஆகும். உண்மையில், தற்போது சட்டத்தின் அடிப்படை கொள்கையை *caveat emptor* என கருதாது. *caveat vendtor என* கருதுதல் சாத்தியமற்றதாகி உள்ளது.

Adan J.N., MacQueen H (2010) *Atiyah's Sale of Goods* (12th Ed), P-140

நீர் இக் கூற்றுடன் உடன்படுகிறீரா?

மேலே தரப்பட்ட கூற்றின் பின்னணியில், இலங்கையில் பொருட்கள் விற்பனைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ள உட்கிடையான நிபந்தினைகள் மற்றும் கட்டுறுத்துக்களின் எல்லை மற்றும் பிரயோகத்தை ஆராய்க.

**( 14 புள்ளிகள் )**

2. (அ) சுபுன் என்பவன் ரூபா.450,000/- என விலையிடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்குவதற்கு 01.07.2019 அன்று பைக் லேண்ட் கம்பனியுடன் ஒரு வாடகை கொள்வனவு உடன்படிக்கையில் ஈடுபட்டான். முதலில் ரூபா. 50,000/- செலுத்தி மிகுதி வாடகை

கொள்வனவு விலையை 24 மாதாந்த தவணையடிப்படையில் செலுத்துவதாக உடன்பட்டான். மேலும், ஒவ்வொரு மாதமும் 30ம் திகதி அன்றோ அதற்கு முன்னதாகவோ மாதாந்த தவணைக் கட்டடணத்தை செலுத்த சுபுன் உடன்பட்டான். சுபுன் மூன்று தவணைக் கட்டணத்தை உரிய நேரத்தில் செலுத்தினான். எனினும் சுபுன் நிதி நெருக்கடிக்கு ஆளானதால் நான்காவது தவணை கட்டணத்தை சுபுனால் செலுத்த முடியவில்லை. 07.11.2019 என திகதியிடப்பட்ட கடிதம் மூலம் மாதாந்த தவணைக் கட்டணத்தை உடனடியாக செலுத்துமாறு பைக் லேண்ட் கம்பனி சுபுனுக்கு அறிவித்தது மேலும், ஏதேனும் தவறுகை ஏற்படும் பட்சத்தில், கம்பனி நிலுவைகளை அறவிட ஏதேனும் உரிய நடவடிக்கைகளை எடுக்க கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவன் அறிவிக்கப்பட்டான். சுபுன் கடிதத்தை பெற்றுக் கொண்ட மூன்று நாட்களின் பின்பு, பைக்லேண்ட் கம்பனியின் அறிவுறுத்தலுக்கு அமைய காடையர்கள் குழுவொன்று மோட்டார் சைக்கிளை கைப்பற்றியது. மேலும் மோட்டார் சைக்கிளுக்கு குறிப்பிடத்தக்களவு சேதம் ஏற்படுத்தப்பட்டது.

பைக்லேண்ட் கம்பனி இலங்கையின் வாடகை கொள்வனவு உடன்படிக்கையுடன் சம்பந்தப்பட்ட சட்டத்துக்கு அமைய நடந்து கொண்டுள்ளதா என சுபுன் அறிய விரும்புகிறான்.

( 15 புள்ளிகள் )

சுபுன் 75 வீதத்திற்கு மேலதிக தவணை பணத்தினை செலுத்தியிருந்தால் உமது விடை வேறுபடுமா? சுருக்கமாக ஆராய்க.

( 05 புள்ளிகள் )

3. இயைபான நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டம் என்பவற்றுடன் தொடர்புறுத்தி கீழே தரப்பட்டுள்ள சூழ்நிலைகளில் ஏற்படுகின்ற சட்ட விளைவுகளை ஆராய்க.

(அ) மகிந்த, ஷிரானி சார்பில் உண்டியல் ஒன்று வரைந்தான் இந்த உண்டியல் நாமல் என்பனால் திருடப்பட்டதுடன் நாமல் ஷிரானியுடைய கையொப்பத்தை போலியாக இட்டான். பெறுதியில் நல்லெண்ணத்தில் அதனை எடுத்த நாமல் உண்டியலை ரோகித்தவுக்கு வழங்கினான்.

( 06 புள்ளிகள் )

(ஆ) கடன் கொடுப்பனவு ஒன்றை செலுத்துவதற்காக ரஞ்சன் சார்பாக ரனில் செரன்டிப் வங்கி மீது காசோலை ஒன்றை வரைந்தான். ரஞ்சன் காசோலையை புறக்குறிப்பிட்டதுடன், மலிக்கிடம் இருந்து பெறப்பட்ட பொருட்களுக்காக மலிக்கிற்கு அதனை வழங்கினான். மலிக் அந்த காசோலையை சீலந்து வங்கியில் உள்ள தனது கணக்கில் வைப்பிலிட்டான். காசோலையில் இருந்து பணத்தை சேகரித்த சீலந்து வங்கி, தவறுதலாக இன்னுமொருவருடைய கணக்கில் அதனை வைப்புச் செய்தது.

( 08 புள்ளிகள் )

(இ) விமல் ரூபா.10,000/- பெறுமதியான காசோலை ஒன்றை சம்பிக்க சார்பாக வரைந்தான். குறிப்பிட்ட தொகையை சம்பிக்க ரூபா.100,000/- என்று மாற்றி அனுரவுக்கு வழங்கினான்.

( 06 புள்ளிகள்)

4. ருகமல் இலங்கையின் வட மத்திய மாகாணத்தில் உள்ள ஒரு அரசாங்க பாடசாலைக்கு அருகில் சிற்றுண்டிச் சாலை (Canteen) ஒன்றை நடாத்தி வருகிறான். சொசேஜ் பனிஸ், மீன் பனிஸ், ரோள்ஸ், கட்லட், பெட்டிஸ் மற்றும் போத்தலிடப்பட்ட மென்பானம் என்பன குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதால் இந்த உணவகம் மாணவர் மத்தியில் பிரசித்தம் பெற்றிருந்தது. இந்த உணவு வகைகள் காட்சிப் பெட்டியில் மூடப்படாது வைத்திருக்கப்பட்டிருந்துடன் அவற்றின் மீது ஈ மற்றும் சிறு நுண்ணிய பூச்சிகள் ஊர்வதை பலர் அவதானித்தனர்.

உணவு தயாரிப்புக்காக உணவகத்தின் உள்ளே போதிய இடம் இல்லாமை காரணமாக, இந்த சிற்றுண்டிப் பொருட்கள் உணவகத்திற்கு வெளியே வைத்திருந்த திறந்த வெளிப்பகுதியில் உள்ள மேசை மீது தயாரிக்கப்படுகின்றன. ருக்மல் உடைய மனைவி சமன்மலி எஞ்சிய சிற்றுண்டிகளை காலையில் பொரித்து எடுப்பதுடன் அவை விற்று தீர்க்கப்பட்ட பின்பு புதிய உணவுப் பொருட்கள் தயாரிக்கப்படும். அவள் குறிப்பிட்ட மேசைக்கு கீழே உள்ள வெறும் நிலத்தில் மரக்கறிகளை வைத்திருப்பாள். பொரித்த சொசேஜல் மற்றும் மீன் ஆகியன மூடப்படாத பாத்திரம் ஒன்றில் வைக்கப்படும்.

இரண்டு பூனைகள் வழமையாக உணவத்திற்குள் உறங்குவதுடன் மரக்கறி வைத்திருக்கின்ற மேசைக்கடியில் உள்ள நிலத்தில் அவை உறங்கும். உணவகத்திற்குள் குளிர் சாதனப் பெட்டி ஒன்று இல்லை. மேலும் போத்தலிடப்பட்ட மென்பானங்கள் காட்சிப் பெட்டிக்குள் வைத்திருக்கப்படும். இந்த போத்தல்களில் Label இடப்படவில்லை. மேலும் அவை உயர் அளவிலான சீனியை உள்ளடக்கிய பானங்கள் ஆகும். அங்கு lable ஒன்று இன்மையால், பொது மக்களின் தகவலுக்காக உள்ளடக்கங்கள், காலாவதி திகதி மற்றும் தயாரிப்பாளர்களுடைய தகவல்கள் எதுவும் இல்லை. பாடசாலை குப்பை குழியும் உணவகத்திற்கு அண்மையில் இருந்ததோடு சில வேளை அவற்றிலிருந்து துர்நாற்றம் வீசும்.

குசைன் என்ற பாடசாலை ஆசிரியர் ஒருவர் ருக்மலுக்கு எதிராக ஏதேனும் முறைப்பாடு ஒன்றை மேற்கொள்ள முடியுமா என வினவுகிறார். இல 26, 1980ம் ஆண்டின் (திருத்தப்பட்டவாறான) உணவுச் சட்டத்தின் இயைபான ஏற்பாடுகள் மற்றும் நடைமுறை உதாரணங்களுடன் குசைனுக்கு ஆலோசனை வழங்குக.

( 20 புள்ளிகள் )

00089

5. "பொருளாதார தாராளவாதத்தின் அடிப்படை நோக்கம் யாதெனில், நுகர்வோரின் தேவைகளை அதி உச்சளவில் திருப்தி படுத்துவதற்காக வளங்களை ஒதுக்குதல் ஆகும். நுகவோர் பாதுகாப்பு சட்டங்கள் இந்த விடயத்தில் முக்கிய பங்களிப்பை பெறுகின்றன. நுகர்வோர் பாதுகாப்பானது நுகர்வோருக்கு இருக்கக் கூடிய பல் வேறுபட்ட உரிமைகளையும், நிவாரணங்களையும் உள்ளடக்குகின்றன."

இக் கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? 09ம் இல 2003ம் ஆண்டின் நுகர்வோர் விவகார அதிகார சபை சட்டத்தின் ஏற்பாடுகளுடன் தொடர்புறுத்தி மேலே தரப்பட்ட கூற்றின் வலிதுடைமையை மதிப்பிடுக. தீர்ப்புச் சட்டம் மற்றும் உதாரணங்களுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

( 20 புள்ளிகள் )

6. உல்லாசப் பிரயாண முகவர் நிலையம் ஒன்றின் வாகன சாரதியான அமேஷ், அலைவ் காப்புறுதி கம்பனியிடம் இருந்து காப்புறுதி கொள்கையொன்றை பெற்றுக் கொண்டான். கீழே தரப்பட்டுள்ளமை அமேஷினால் பூர்த்தி செய்யப்பட்டு வழங்கப்பட்ட திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

அ. கேள்வி : நீர் எப்போதாவது ஏதேனும் குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?
விடை - இல்லை

ஆ. கேள்வி – கடந்த 5 ஆண்டு காலப்பகுதியில் நீர் ஏதேனும் சத்திரசிகிச்சை, விபத்து அல்லது காயம் என்பவற்றிற்கு முகம் கொடுத்துள்ளீரா?
விடை - இல்லை

அமேஷ் விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்கின்ற போது தனது வயதை 30ற்கு பதிலாக 33 என பிழையாக குறிப்பிட்டான். 19 வயதாக இருந்த போது அவன் கவனயீனமான வாகன ஓட்டுகைக்காக குற்றவாளியாக்கப்பட்டான். எனினும் அது ஒரு முக்கிய விடயம் என அவன் கருதவில்லை.
அத்துடன், 10 வயதாக இருக்கும் போது அவன் எதிர்கொண்ட சத்திரசிகிச்சையையும் அமேஷ் வெளிப்படுத்தவில்லை.

அமேஷ், கீழே தரப்பட்ட வாசகத்தினை தொடர்ந்து திட்டத்தில் தனது கையொப்பத்தை இட்டான்.

" என்னுடைய சிறந்த அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் காப்புறுதி திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து கூற்றுக்களும் விபரங்களும் பூரணமானதும் உண்மையானதும் என விளம்புவதுடன் எந்த விதமான முக்கியமான நிகழ்வும் நிறுத்தி வைக்கப்படவோ அடக்கி வைக்கப்படவோ இல்லை. காப்புறுதி கொள்கையை பெற்ற மூன்ற மாதத்தின் பின்பு, அவன் அவனுடைய காருக்கு பதிலாக வான்(Van) ஒன்றை மாற்றியதுடன் அதே உல்லாசப் பிரயாண முகவராண்மைக்காக வேலை செய்தான்.

எவ்வாறாயினும், அதனைப் பற்றி அவன் அலைவ் காப்புறுதி கம்பனிக்கு அறிவிக்கவில்லை. சில நாட்களின் பின்பு, அவனுடைய வான், பஸ் வண்டியுடன் மோதி விபத்து ஏற்பட்டது. இதன் விளைவாக அமேஷ் நிரந்தரமாக அங்கவீனமுற்றான். அமேஷ் காப்புறுதி உடன்படிக்கையை மீறினான் என்றடிப்படையிலான காரணத்தை முன்னிறுத்தி அமேஷ் பெற்ற காப்புறுதி கொள்கையின் கீழ் அவன் கோரிக்கையை செலுத்த காப்புறுதி கம்பனி மறுக்கின்றது.

காப்புறுதி சட்டத்துடன் தொடர்புறுத்தி அமேஷ்க்கு ஆலோசனை வழங்குக. பொருத்தமான சட்ட எண்ணக்கருக்கள் மற்றும் தீர்ப்புச் சட்டத்துடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள் )

7. "உண்டியல் (Bill) ஒன்றின் முக்கியமான அம்சம் எதுவெனில் அது கைமாற்றத்தக்கது ஆகும். நிட்சயமாக, உண்டியலை வரைபவர் குறிப்பிட்ட உண்டியல் கைமாற்றப்படுவதையோ அல்லது பரிமாற்றப்படுவதையோ மோசடிக்கு எதிரான பாதுகாப்பு என்றவகையில் அதனை அனுமதிப்பதில்லை. இதே போன்று, புறக்குறிப்பிடுபவர் அவருடைய புறக்குறிப்பின் மூலம் மேலதிக கைமாற்றங்களை தடுக்க விரும்பலாம். இது தொடர்பாக, வரைபவர் அல்லது புறக்குறிப்பிடுவர் உண்டியலின் முகத் தோற்றத்தில் மட்டுப்பாடான சொற்களை உள்ளடக்கலாம்"

Davis J(1992) *Text Book on Commercial Law* (1st Ed) P 196.

உண்டியில் ஒன்றின் கைமாற்றத்தக்க தன்மையுடன் (Negotiability) தொடர்புறுத்தி மேலே தரப்பட்ட கூற்றின் மீது கருத்துரைக்க.

மாற்று உண்டியல் கைமாற்ற கட்டளைச் சட்டத்தின் பொருத்தமான பிரிவுகளுடனும், தீர்ப்புச் சட்டவியலுடனும் தொடர்புறுத்தி உமது விடையை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள் )

8. வர்த்தக சட்ட பரப்புக்குள் பின்வருவனவற்றில் ஏதேனும் **இரண்டின்** (02) முக்கியத்துவத்தை விளக்குக.

(அ). *Nema dat quod noo hahet* என்ற எண்ணக்கருவும் அதற்கான விதிவிலக்குகளும;

(ஆ). நிபந்தனையுடனான விற்பனை உடன்படிக்கை மற்றும் வாடகை கொள்வனவு உடன்படிக்கை;

(இ). காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றின் இயல்பு மற்றும் எல்லை: மற்றும்

(ஈ). பொருட்கள் விற்பனையில் ஆபத்தைக் கைமாற்றுதல்.

(20 புள்ளிகள் )

**பதிப்புரிமை பெற்றது.**